பக்கங்கள் இரண்டு

வலம்புரி
VALAMPURI

விலைரூபா 3-00

சங்க: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 04 புதன்கிழமை (17-05-2000) VALAMPURI ஒலி: 150

பொது சன நூலகம் 19 JUN 2000

நல்லூர் இன நூலகம் மாநகரசபை மன்றம் யாழ்ப்பாணம்

★ கைதடி, சாவகச்சேரிப் பகுதிகளை ஊடறுத்த

புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடும்சண்டை மூண்டது

இருசாராரும் பரஸ்பரம் பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மூன்றுநாள் போர் ஓய்வின்பின் விடுதலைப்புலிகள் தென்மராட்சியில் கைதடி, சாவகச்சேரிப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவல் அரண்களை ஊடறுத்து அவர்கள் மீது பாரிய தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர்.

இத்தாக்குதல்களின்போது இராணுவத்தினரும், புலிகளும் சரமாரியான மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்மராட்சிப் பகுதியில் கைதடி, சாவகச்சேரிப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவல் அரண்களை விடுதலைப்புலிகள் ஊடறுத்து பலத்ததாக்குதல்களைத் தொடுத்துள்ளனர்.

இத் தாக்குதல்களின் போது மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை இருசாராரும் மேற்கொண்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன் தினம் மாலை வெடித்த இத் திடீர் யுத்தத்தின் போது யாழ்ப்பாண நகரப்பகுதியின் கரையோரப் பகுதிகளில் பலத்த எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்றதை

(2ஆம் பக்கம் பார்க்க

கன்னாதிட்டி மக். வங்கி வாடிக்கையாளர் அவதி

ஏமாற்றத்துடன் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட இரண்டாவதுநாளானநேற்று மக்கள் வங்கி கன்னாதிட்டி கிளை திறக்கப்பட்டிருந்த போதும் தனது கொடுக்கல் வாங்கல்களை நடாத்த வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வங்கி கன்னாதிட்டிக்கிளையில் பென்ஷன் பெறுபவர்கள் நேற்று நீண்ட

[2ஆம் பக்கம் பார்க்க]

ஊரடங்கு தளர்த்தப்பட்டால் கடமைக்கு சமூகமளிக்கவும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமுல் படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின் அரச, மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் அதிகாரிகளும் ஊழியர்களும் கடமைக்குச் சமூகமளிக்க வேண்டுமென்று பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறி

[2 ஆம் பக்கம் பார்க்க]

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா கலந்தாலோசனை ஒன்றினை நடாத்தியுள்ளார்.

நேற்று மாலை அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதி

(2ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஆயுதங்களுடன் மூவர் கைது

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து ஆயுதங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமானப்படையினர் அறிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விமான நிலை

(2ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலைகள் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபோதும் நகரில் உள்ள பெரிய சிறிய பாடசாலைகள் ஒன்றும் நேற்றுஇரண்டாவது நாளாக இயங்கவில்லை.

இதே வேளை ஊரடங்குச்

[2ம் பக்கம் பார்க்க]

இனமோதலுக்கு தீர்வு காணும்சாத்தியமில்லை

நோர்வே வெளியுறவு அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் இனமோதல்களுக்கு விரைவில் தீர்வுகாணக்கூடிய சாத்தியம் தோன்றவில்லை என நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன், ஜோன்யவ்னட் கூறியுள்ளார்

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் மோதல்களை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று தோன்றவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ)

மணிமண்டபத்தில் வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதாரப்பகுதியை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தற்காலிகமாக இயங்கவைப்பதற்குரிய ஆயத்தவேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

(2ஆம் பக்கம் பார்க்க)

பண்டத்தரிப்பில் யூ என்:எச்:சி:ஆர்:

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் வலிகாமம் பகுதிகளில் இருந்து பெருமளவுமக்கள் வலிகாமம் மேற்குப்பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றதை அடுத்து யூ.என்.எச்.சி.ஆர். தனது கிளை அலுவலகம் ஒன்றை

(2 ஆம் பக்கம் பார்க்க)

விமானத் தாக்குதலால் மக்களே பாதிப்படைவர்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் நிலைகளின் மீது விமானப்படையினர் தீவிரப்படுத்தப்படவிருக்கும் தாக்குதல்களால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தகைய விமானத் தாக்குதல்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வுகாணும் முயற்சிகளை சீர்குலைத்துவிடும் இதனால் அப்பாவிப் பொது

(2ஆம் பக்கம் பார்க்க)

சுழிபுரத்தில் ஐ-சி-ஆர்-சி-

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் சுழிபுரத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் பெருமளவில் வலிகாமம் மேற்கில் தங்கியுள்ளதாலேயே

(2ஆம் பக்கம் பார்க்க)

இன்று அதிகாலை கிழக்கு கீழ்வானில் அபூர்வ காட்சி!

இன்று அதிகாலை கிழக்குத்திசையில் கீழ்வானில் அபூர்வகாட்சி ஒன்று தென்படக் கூடியதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று சனி.குரு, செவ்வாய், சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களுடன் சூரியனும், சந்திரனும் ஏறத்தாழ நேர்கோட்டில் வரும். இவ் வேளை கிழக்குத் திசை கீழ்வானில் தீப்பிழம்புக் குவியலைப்போன்ற ஒரு காட்சியைக் காணலாம் என்று இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க அறிவியல் பிரசாரக் குழுத் தலைவர் எஸ். பேராசிரியன் அறிவித்துள்ளார். [வ]

★ ஊரடங்கு தளர்வு

வைத்தியசாலை,வங்கிகள்இயங்கின வர்த்தகர்கள் பொருட்கள் ஏற்றினர்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட இரண்டாவது நாளான நேற்றும் பெரும்பாலான நகர் வர்த்தகர்கள் தமது வர்த்தகப் பொருட்களை முழுமையாக வாகனங்களில் ஏற்றியதை அவதானிக்க முடிந்தது.

நகரிலுள்ளவங்கிகள் யாவும் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களுடன் வாடிக்கையாளர்களின் தேவைகளை ஓரளவுக்குப் பூர்த்தி செய்து வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

இன்றுமுதல் தீவுப்பகுதியில் உள்ளூர் பஸ்சேவை

இன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் பட்சத்தில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தினமும் காலை 9.15 மணிக்கு ஊர்காவற்றுறைக்கு பஸ் சேவை ஒன்றினை நடாத்தவிருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை உள்ளூர் சேவையாக ஊர்காவற்றுறையில் இருந்து வேலணைச் சந்தி வரையும், பின் சுருவில் ஊடாக காலையும், மாலையும் பாடசாலைச் சேவை ஆரம்பிக்கப்படுவதுடன் புங்குடுதீவில் இருந்து குறிகட்டுவான் வரை உள்ளூர்ச் சேவை நடத்தப்படவிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [வ]

கைதடியில் ஷெல்வீச்சு தாயும் மகனும் காயம்

[புலோலி]

கைதடியில் நேற்று வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் தாயும் மகனும் காயமடைந்து பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதடி தெற்கைச சேர்ந்த சுப்பிரமணியம் சின்னம்மா [வயது 53] சுப்பிரமணியம் பவினேந்திரம் [வயது 19) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

தாயைச் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்த போது திடீரென அப்பகுதியில்வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. [ந-25]

இன்று முதல் தீவுப் பகுதிக்கு பஸ்சேவை ஆரம்பிக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நேற்று 2-வது நாளாக மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில் நடாத்தப்பட்டது.

பருத்தித்துறை பஸ் டிப்போவினால் அங்கிருந்து நவாலிக்கு 750, 751 இலக்க பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இச் சேவையினால் ஒரு தடவைக்கு 4,000 ரூபா வருமானம் பெறப்பட்டதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரத்தில் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவைகள் நடாத்தப்பட்டது.

மகாஜனாக்கல்லூரிக்கு பஸ் சேவை நடாத்தப்பட்ட போதும் பெருமளவு மாணவர்கள் பஸ்சில் கல்லூரிக்குச் செல்லவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

இளவாலை, மாதகல், குப்பிளான், அளவெட்டி, தெல்லிப்பழைஆகிய பகுதிகளுக்கு 782, 787, 788, 768, 76 ஆகிய இலக்க பஸ் வண்டிகளும் கோப்பாய்க்கும் மானிப்பாய்க்கும் இடையில் 811 இலக்க பஸ் சேவையும் சுன்னாகத்திற்கும் வாதரவத்தைக்கும் இடையில் 785 இலக்க பஸ் சேவையும் ஆறுகால் மடத்திலிருந்து காரைநகர் வரையும் 786 இலக்க பஸ்சேவையும் நடாத்தப்பட்டது.

காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் சந்தியிலிருந்தும் பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியில் இருந்தும் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்தும் இச்சேவைகள் நடாத்தப்பட்டன. [வ]

விமானத்...

மக்களே பெரிதும் பாதிப்படைவர் என்றுமனிதாபிமான முக்வர் நிலையம் ஒன்றுக்கு கருஜெயசூரியா தெரிவித்துள்ளார். (வ)

மணிமண்டபத்தில்...

மேற்படிமணிமண்டபத்தில் சுகாதாரப்பகுதிஇயங்குவதன் மூலம் வைத்திய சேவையை மக்கள் பெறக் கூடியதாக இருக்கும் என்பதும் இங்து குறிப்பிடத்தக்கது. (ந)

சுழிபுரத்தில்...

அவர்களது பணிகள் சுழிபுரத்தில் நடைபெற ஏதுவாக அங்கு காரியாலயம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. (வ)

பண்டத்தரிப்பில்...

பண்டத்தரிப்பில்திறந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து சென்ற மக்களின் நன்மை கருதி பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

வைத்தியசாலை...

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட மூன்று மணிநேரத்தில் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர்பிரிவும்கிளினிக்குகளும் நடை பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை வைத்தியசாலையின் ஊழியர்களின் வரவு குறைந்து காணப்பட்டபோதும் வைத்தியசேவைகள் தடையின்றி இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

ஊரடங்கு...

வித்துள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்ட செயலக ஊழியர்கள், நல்லூர் யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச செயலர் காரியாலயங்கள், மின்சார சபை கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், உணவுத் திணைக்களம் சுகாதாரத் திணைக்களம், தேசிய நீர் வடிகாலமைப்புச் சபை, வடபிராந்திய போக்குவரத்துச் சபை உட்பட காங்கேசன்துறை பருத்தித்துறை துறைமுகங்களில் பணிபுரிவோரும் தபால் திணைக்களம், ரெலிகொம் யாழ். மாநகரசபை சகல வங்கி ஊழியர்கள், ஆகியோர் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் கட்டாயம்கடமைக்குசமூகமளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. [வ]

கன்னாதிட்டி...

நேரம் காத்திருந்தனர்.

வங்கியில் இருந்த இரும்புப்பெட்டி திறப்பதில் ஏற்பட்ட சிக்கலினால் ஊரடங்கு வேளையும் முடியும் தறுவாயில் வெள்ளிக்கிழமை பென்சனியர்களை வருமாறு வங்கி அதிகாரிகள் கூறியதை அடுத்து வாடிக்கையாளர் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது. [வ]

அன்புவாசகர்களே

யாழ். குடா நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக இன்று வலம்புரி இரண்டுபக்கங்களிலேயே வெளிவருகிறது. நிலைமைஉணர்ந்தநீங்கள் இதனை பொறுமையுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. (ஆ.ர்)

பாடசாலை...

சட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில் உள்ளபாடசாலைகளில் பெரும்பாலானவற்றில் மாணவர்கள் வரவு குறைவாகக் காணப்பட்டுள்ளதாக பிரதேசச் செய்தியாளர்கள் தெரிவிக்கிறார்கள். (வ)

கட்டுநாயக்கா...

யத்தின் பிரதான வாயில் வழியாக ''பிக்கப்'' வாகனம் ஒன்றில் இவர்கள் உள்நுழைய முயற்சி செய்ததாகவும் அவர்களிடம் இருந்து ரீவோல்வர் ஒன்றும் தோட்டாக்கள் ஐந்தும் இயந்திரத்துப்பாக்கிகளுக்கான மகசீன்களும் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (4)

தொழிற்சங்கப்...

களும் ஜனாதிபதியைச் சந்தித்து நாட்டின் நிலைமை குறித்து இந்தக் கலந்தாலோசனை நடத்தப்பட்டதாக அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்தார். (வ-4)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 17 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதயத்தை வருடிய இடம்பெயர்வு வீதிகளில் மக்கள் பெரும்அவஸ்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதி வில்லூன்றிப்பகுதி குடியிருப்புகளில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடுமையான ஷெஷ வீச்சினால் அங்குள்ள மக்கள் நேற்று பெருமளவில் வலிகாமம் மேற்குப் பகுதியை நோக்கி சென்ற வண்ணம் இருந்தனர்.

காங்கேசன்துறை வீதி வழியாகவும் பலாலி வீதி வழியாகவும் ஆடியபாத வீதி வழியாகவும் இந்த மக்கள் சைக்கிள்கள், லான்ட்மாஸ்ரர்கள் தள்ளுவண்டிகள், யாழ். மாநகரசபைக்குப்பைகள் அள்ளும் வண்டில்கள் ஆகியவற்றிலும், காலநடையாகவும் சென்ற வண்ணம் இருந்தனர்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது அகப்பட்ட பொருட்களை மூட்டைமுடிச்சாக்கிக்கொண்டு மக்கள் சென்றவண்ணம் இருந்தனர்.

களைப்புடன் சென்றவண்ணம் இருந்த மக்களின் பரிதாபகரமான காட்சியை வீடுகளில் இருந்தோர் வீட்டு வாசல் முன்பாக வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றதையும் சிலர் அவர்களுக்கு தாக சாந்தி செய்ததையும் அவதானிக்க முடிந்தது.

இடம்பெயர்வின் அவலத்தினால் சென்றுகொண்டிந்த மக்களுக்கு எந்த தொண்டர் அமைப்பும் உதவிகள் வழங்கியதாகவோ இவர்களுக்கு சமைத்த உணவை அரச அதிகாரிகள் வழங்கியதாகவோ தெரியவில்லை.

குருநகர், கொட்டடி, நாவாந்துறை, பாஷையூர், பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை, கச்சேரிப் பகுதி மக்களே நேற்று பெருமளவில் இடம்பெயர்ந்தவர்களாவர். (வ)

வந்தாறு மூலையில் வாகனம் கடத்தப்பட்டது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ஆயுதபாணிகளால் வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலர்களின் ''பிக்கப்'' வாகனமும் பயணிகளுடன் கூடிய தனியார் பஸ்வண்டி ஒன்றும் வந்தாறுமூலை கமநல சேவை நிலையத்திற்கு அண்மையில் வைத்து நேற்று முன்தினம் காலை ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட தனியார் பஸ்வண்டியில் இருந்த பயணிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் கே. மகேசன் வாழைச்சேனை பிரதேச செயலர் எஸ். புண்ணியமூர்த்தி ஆகியோர் மட்டுநகரில் இருந்து பிக்கப் வாகனத்தில் சென்ற இவர்கள், ஏறாவூர் பிரதேசசெயலரை செங்கலடி அலுவலகத்தில் இறக்கி விட்டு வாழைச்சேனை பிரதேச செயலரை வாழைச்சேனை அலுவலகத்துக்குக் கொண்டு சென்ற போதே இவ்வாகனம் கடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. [வ]

120 கிலோ கிராம் வெடிபொருள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் இனந் தெரியாதோரினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 120 கிலோகிராம் நிறையுள்ள வெடிபொருட்களை நேற்று பொலிஸார் கண்டு பிடித்துள்ளார்கள்.

பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள ஒருவர் வழங்கிய தகவல்களின்படி விசேடகுழு ஒன்றினால் இந்த அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வெடிபொருட்கள்

புலிகளுக்கும்...

அடுத்து அப்பகுதி மக்கள் பெருமளவில் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றவண்ணமுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதல்களைஅடுத்து அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் வகையில் இராணுவத்தினர் ஷல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை சரமாரியாக மேற்கொண்ட வண்ணமுள்ளனர்.

இருசாராரது நேரடி மோதல்களின் போது தீர்க்கப்படும் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் யாழ். நகரை உலுப்பியவண்ணமுள்ளது.

இதே வேளை கைதடி, சாவகச்சேரி ஆகிய இரு பகுதிகளிலும் புலிகளின் தாக்குதல்களை எதிர்த்து பாரிய தாக்குதல்களை இராணுவம் மேற்கொண்டிருப்பதாகவும் இந்நடவடிக்கைக்கு விமானப்படையினர் மற்றும் பீரங்கிப்படையினர் உதவிபுரிவதாகவும் அவர்களின் உதவியுடன் புலிகளின் முன்னேற்ற முயற்சிகளை முறியடித்துவிட்டதாகவும் இராணுவத்தினர் தரப்பு நிலைகளை ப்பலப்படுத்திவருவதாகவும் அரசதரப்புச் செய்திகள்தெரிவித்ததுடன் யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

தாக்குதல் நடத்தும் பொருட்டு கொழும்புக்கு அல்லது சன நெருக்டி வாய்ந்த மற்றுமொரு பகுதிக்கு கொண்டு செல்லப்படவிருந்தன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வ-4]

கலந்துரையாடல்

யாழ். மாவட்டதில் தற்போதைய நிலை குறித்து யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இறந்தோர் தொகை ஐந்தாக அதிகரிப்பு

குருநகர் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் காயமுற்று யாழ்.போதனாவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

ஜெயசீலன் றெமிசியஸ் வயது 14 என்பவரே இறந்தவராவர். இவருடன் குருநகர் ஷெல்லுக்கு இறந்தவரின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. (வ12)

நோயாளர் கப்பலில் வைத்தியர்களும் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

அவசர சிகிச்சைக்காக நேற்று ஐ.சி.ஆர்.சி.கப்பலில் கெழும்பு சென்ற நோயாளர்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் கடமையில் இருந்த பெரும்பான்மை இன வைத்தியர்களும் கொழும்பு சென்றதாக அறியப்படுகிறது. [வ-12]